14th March 1969]

டங்களுக்கு வழக்கமாக அனுப்புவதைவிட இரண்டு மடங்கு துரிதமாக அனுப்பவேண்டிய நிலையில் இருந்தபோது சில மூட்டைகளில் பயிர் முளைத்துவிட்டதாகத் தகவல் கிடைத்தது. முளைத்தது 2½ அங்குலமா 2¼ அங்குலமா என்று தகவல் தரப்படவில்லை.

திரு. டி. கே. சுப்பையா: தலைவர் அவர்களே, நவீன நெல் உலர்த்தி இயந்திரம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அப்படியிருந்தும் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. அப்படியானால் அந்த மில்லுக்கு நெல்லைக் கொண்டு செல்லவில்லையா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: இது நடந்தது 1967-ல். நவீன மில் நிறுவப்படாத நிலையில் ஏற்பட்ட விளைவு இது. இந்த ஆண்டு நல்ல வெயில் காய்ந்ததால் உலர்த்தும் இயந்திரத்திற்கு வேலையில்லாமல் போய்விட்டது.

Andhra rice.

* 112 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state the quantity of rice imported into Tamil Nadu from Andhra Pradesh from April 1967 to the end of June 1968?

ஆந்திர அரிசி

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

ஆந்திராவிலிருந்து 1967 ஏப்ரல் முதல் 1968 ஜூன் முடிய தமிழகத்திற்கு வந்த அரிசி எவ்வளவு?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: பதினைந்தாயிரத்து நூற்றைம்பது டன்கள் பச்சரிசி.

Government High School at K. Pudupatti village.

* 113 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(a) whether a Government High School with 50 students has been started at K. Pudupatti village in Uthamapalayam taluk of Madurai district, even though a private High School is functioning there, with 350 students; and

(b) if so, the reason therefor?

அரசினர் உயர்நிலைப்பள்ளி, க. புதுப்பட்டி

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை மாவட்ட உத்தமபாளையம் தாலுகா க. புதுப்பட்டி என்னும் ஊரில் தனியார் உயர்நிலைப்பள்ளி 350 மாணவர்களுடன் இயங்கிவரும் பொழுது அதே ஊரில் 50 மாணவர்களுடன் சர்க்கார் உயர்நிலைப்பள்ளி ஆரம்பிக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், காரணமென்ன ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) ஆம்.

(இ) இந்தப் பகுதியில் உள்ள மானியம் பெறும் உயர்நிலைப் பள்ளி மனநிறைவு அளிக்கும் வகையில் இயங்கி வராததால் அரசுப் பள்ளி ஒன்றைத் துவக்குவதென அரசு முடிவு செய்தது. அரசுப் பள்ளியில் தொண்ணூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் உள்ளனர்.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, சென்ற 15 தினங்களுக்கு முன்பு அந்த ஊருக்கே போயிருந்தேன். பார்த்தேன். ஐம்பது குழந்தைகள் என்று ரிகார்டில் இருக்கிறதே தவிர உண்மையில் 30-க்கும் குறைவாகத்தான் இருக்கிறார்கள். அது மட்டுமல்ல. புதிய பள்ளி வேண்டுமென்றால் சர்க்காருக்கு 50 ஆயிரம் கொடுக்க வேண்டுமென்றும், ஐந்து ஏக்கர் நிலம் தரவேண்டுமென்றும், கட்டிடம் கட்டிக் கொடுக்க வேண்டுமென்றும் கேட்கப்படும். அப்படி அங்கே கேட்கப்பட்டதா ? அங்கே நன்கொடை எதுவும் தரப்படவும் இல்லை. பள்ளி கவனிக்கப் படாமல் இருக்கிறது. சர்க்கார் பணம் ஆண்டுக்கு 40 ஆயிரம் ரூபாய் வீணாகிக்கொண்டிருக்கிறது. முப்பது குழந்தைகளுக்காக 40 ஆயிரம் ரூபாய் செலவழிப்பது தேவைதானா என்பதைப் பரிசீலித்து அந்த நிலையை நீக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : அந்த ஊரில் 7,000 ஜனத் தொகை இருக்கிறது. ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட பள்ளிக் கூடத்தில் அரசியல் நோக்கத்தோடு பல தவறுகள் செய்யப் படுவதாக அங்குள்ள பொதுமக்கள் அறிவித்தால், அரசாங்கமே ஒரு பள்ளியை நடத்த வேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டது. அந்தப் பழைய பள்ளியிலே முன்னால் நடந்திருக்கிற தவறுகளை யெல்லாம் இப்போது அரசாங்கம் பரிசீலித்து வருகிறது. அரசாங்கம் கொடுக்கிற பணத்தைத் தவறான வழியில் ஒரு நிறுவனம் பயன் படுத்தும் நிலை மாற்றப்படவேண்டுமென்று அரசாங்கம் பரிசீலித்து வருகிறது.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, இந்த சட்ட மன்றத்திலிருந்து ஒரு கமிட்டி நிறுவி ஏற்கனவே நடந்துவருகிற அந்தப் பள்ளிக்கு பொதுமக்கள் எப்படித் தங்களையே அர்ப்பணித் திருக்கிறார்கள், எப்படி அதை ஆதரிக்கிறார்கள் என்பதைக் கண்டறிய ஏற்பாடு செய்யவேண்டும். அப்படி நான் சொல்வது தவறு என்று முடிவானால் குற்றம் சாட்டப்பட்டால் அதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆகையால் தேவையில்லாத இடத்தில் 30 குழந்தைகளுக்காக பல்லாயிரக்கணக்கான ரூபாய் வீணாவதைத் தடுக்க தயவு செய்து மீண்டும் இந்த அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : உரிய அதிகாரிகள் அதை விசாரிக்கிறார்கள். அறிக்கை தயாரிக்கிறார்கள். இங்கேயிருந்து யாரும் அங்கே சொல்லவேண்டிய அவசியமில்லை. அங்கத்தினர்

4th March 1969]

அவர்களுக்கு அங்கே இன்னொரு பள்ளி வந்துவிட்டதே என்ற கவலையிருந்தால் அந்தப் பள்ளி எப்படி நடக்கிறது என்று பரிசீலித்துப் பார்த்து அது தேவையா இல்லையா என்ற முடிவை அதிகாரிகள் சொன்னால் அதற்குப் பின்னால் யோசிக்கலாம்.

திரு. வி. தங்கபாண்டியன்: ராமநாதபுரம் மாவட்டத்தில் கமுதி என்ற ஊரில் சர்க்கார் உயர்நிலைப் பள்ளி ஒன்று 800 மாணவர்களைக் கொண்டு சிறப்பாக நடந்து வந்தது. காங்கிரஸ் ஆட்சி காலத்தில் தனிப்பட்ட சமூகத்தாரை ஆதரிப்பதற்காக தனியார் பள்ளிக்கு அனுமதி கொடுக்கப்பட்டது. அதனால் அங்கே சர்க்கார் பள்ளி நடைபெறுவது தடைபட்டிருக்கிறது. காங்கிரஸ் ஆட்சியால் தடையாக இருக்கும்படி செய்யப்பட்ட அந்தத் தனியார் பள்ளியை ரத்து செய்துவிட்டு அரசாங்கப்பள்ளி சீராக நடைபெற அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன்: அரசியல் நோக்கம் பள்ளிகளில் நுழைவது வளர்ந்துகொண்டே போகிறது. இந்த சர்க்கார் இதைத் தடுக்கும்.

Tamil Pandits.

* 114 Q.—Thiru G. KRISHNAMOORTHY: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether Tamil Pandits with fifteen years of service are treated as Grade I Pandits with eligibility for Grade I scales of salary?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன்: ஓரியண்டல் பட்டம் என்னும் குறைந்த அளவு கல்வித் தகுதி பெற்றவர்களாக 1—1—1948 தேதியன்று பணியிலிருந்த பண்டிதர்கள் மட்டுமே இந்த நன்மை பெறுவதற்குத் தகுதியுள்ளவர்களாவர்.

Thiru G. KRISHNAMOORTHY: Have the Government examined the proposal to give to such of those Pandits as have the general educational qualification of S.S.L.C. and Pandit's training or secondary grade training this I Grade salary though they may handle the lower classes?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன்: ஜனவரி 1, 1948 தேதியில் இருந்த ஆசிரியருக்கு விதிவிலக்கு கொடுத்தது. அந்த 15 ஆண்டு சர்வீஸ் இருந்தால் அல்லது சர்வீஸ் இல்லாவிட்டாலும் கூட அந்தத் தேதியில் உத்தியோகத்தில் இருந்து அதற்குப் பின்னால் 15 ஆண்டு எப்போது முடிக்கிறார்களோ அதற்குப் பின்னால் இந்த எக்சம்ஷன் கொடுக்கப்பட்டது. இப்போது பல விதிகள் உள்ளன. தமிழ் பண்டிட் கிரேடு 1-க்கு படிப்பு வேறு இருக்கிறது. அது ஒரு பிரிவு. கிரேடு 2-க்கு பிரிவு ஒன்று இருக்கிறது. அதைத்தான் நாம் பின்பற்றுகிறோம். எக்செம்ஷன் கொடுத்துக் கொண்டே போனால் குவாலிபிகேஷனுக்கே மதிப்பில்லாமல் போகும்.